Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 16 சனிக்கிழமை (29-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 122

# வடக்கு உள்ளூராட்சித் தேர்தலில் பொ. ஐ. முன்னணி போட்டியிடும்!

## தமிழ்க் கட்சிகளுடன் இணைந்தா தனித்தா என்பது பின்னர் முடிவாகும்

கொழும்பு, மார்ச் 29

வடக்கில் விரைவில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் ஆளுங்கட்சியான பொது மக்கள் ஐக்கிய முன்னணியும் போட்டியிட முடிவு செய்துள்ளது.

இத்தேர்தலில் தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதா அல்லது தனித்துப் போட்டியிடுவதா என்பது குறித்துப் பின்னர் முடிவு செய்யப்படும்.

இத்தகவலை பொ. ம. ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் விவசாயத்துறை அமைச்சருமான டி. எம். ஜெயரத்தினா வெளியிட்டுள்ளார்.

கிழக்கில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் ஆளுங்கட்சி தனித்தே போட்டியிடும் என்றும் அவர் சொன்னார்.

வடக்கு-கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் அனேகமாக மே அல்லது ஜூன் மாதத்தில் நடைபெறும் என்றும் அமைச்சர் சொன்னார்.

வடக்கு உள்ளூராட்சித் தேர்தல் ஜூலை மாதம் 7 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ள போதிலும் அதனை மே அல்லது ஜூன் மாதத்தில் நடத்துவதற்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகருக்குள் புலிகள் ஊடுருவல்?

### படையினர் திடீர் தேடுதல்

கொழும்பு, மார்ச் 29

வவுனியா நகருக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளனர் என்று கிடைத்த தகவலையடுத்து, வவுனியா நகரில் திடீர் தேடுதல்கள் படையினரால் மேற்கொள்ளப்படுகின்றன.

மக்கள் குடியிருப்புப் பகுதிகள் திடீரென சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் நடத்தப்படுகின்றன.

திடீர் வீதிச் சோதனைகளும் இடம்பெறுகின்றன.

சோதனையின் போது வதிவிட பாஸ், அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்படுவதுடன் ஆண், பெண் வேறுபாடின்றி உடல் சோதனையும் இடம்பெறுகிறது. (இ-3)

### முல்லைத்தீவுகடலில்நடந்தமோதலில்

## நவீன நீர்மூழ்கி எதிர்ப்புக் கப்பல் புலிகளின் தாக்குதலுக்குள்ளானது

கொழும்பு, மார்ச் 29

முல்லைத்தீவு கடற்பகுதியில் கடந்த 24 ஆம் திகதி கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் நவீன நீர்மூழ்கி எதிர்ப்புக் கப்பலான ''பராக்கிரமபாகு'' புலிகளின் கனரக ஆயுதங்களின் தாக்குதலுக்கு இலக்கானது.

ஆனால் அந்தக் கப்பலுக்குப் பாரதூரமான சேதம் ஏற்படவில்லை என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

வேறு சில கடற்படைப் படகுகளும் புலிகளின் கனரக ஆயுதங்களின் தாக்குதலுக்கு இலக்காகின என்றும் —

அவைகளுக்கும் பாரிய சேதம் ஏற்படவில்லை என்றும்— கடற்படை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(இ-3-150)

## விமானப்படைவீரர் ஒருவரின் சடலம் நாகபட்டினம் கடலில் கண்டெடுப்பு

சென்னை, மார்ச் 29

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடந்த 19 ஆம் திகதி காணாமற்போன எம். ஐ. 24 ரக ஹெலிக்கொப்டரில் பயணம் செய்த விமானப் படை வீரர் ஒருவரின் சடலம் என நம்பப்படும் சடலம் என்று சென்னையை அண்டிய நாகபட்டினம் கடற்பரப்பில் மிதந்து கொண்டிருந்த போது மீனவர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அச் சடலம் கண்டெடுக்கப்பட்ட சமயம் விமானப்படை சீருடை அணியப்பட்ட நிலையில் இருந்ததாகவும் காற்சட்டைப் பொக்கற்றில் பணமும் அடையாள அட்டையும் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சென்னையிலுள்ள இலங்கைக்கான பிரதிநிதி உயர்ஸ்தானிகர் சுஜித கௌதமதாசா பி. பி. சி. யின் சிங்களச் சேவைக்குப் பின்வருமாறு தெரிவித்தார்.

'' நேற்று முன்தினம் பி.டி. அருணசாந்த என்பவருடைய

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப தெற்கில போல வடக்கிலும் தேர்தலில் 'சூடு' பிடிக்குமோ.....?

### காங்கேசன்துறையில்

## தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் மேலும் சிலரின் விவரங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். மாவட்டத்தில் கடந்த 3 மாதங்களில் கைதானவர்களில் மேலும் சிலரின் விவரங்களை 51 ஆவது படையணி கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பலேகல்ல ஈ. பி. டி. பி. யாழ். அலுவலகத்துக்கு அனுப்பியுள்ளார்.

காங்கேசன்துறை பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:-

★ வீரசிங்கம் சுகிர்ன காந்தன்
★ யோசப் பீற்றர் கொல்வின்
★ தேவபாலன் அன்பழகன்
★ கிருஷ்ணபிள்ளை உதயகுமார்
★ செல்வன் ரவிக்குமார்
★ கந்தையா பூபாலசிங்கம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனையில் 3 முஸ்லிம்கள் பலி!

கொழும்பு, மார்ச் 29

வாழைச்சேனையில் நேற்று குண்டு ஒன்று வெடித்ததாகவும் அதில் 3 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர் என்றும்— 7 முஸ்லிம்கள் காயமடைந்தனர் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

குண்டு வெடிப்புச் சம்பவம் தமிழர்—முஸ்லிம் கலவரத்தை மீண்டும் தூண்டி விட்டுள்ளதாக ஏ. எஸ். பி. செய்தி குறிப்பிட்டுள்ளது.

மேலதிக விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. (இ-4)

## ஆனைக்கோட்டைப் பகுதியில் படையினர் - புலிகள் மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 29

ஆனைக்கோட்டை, உயரப்புலம் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நண்பகலில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

படையினர் இப்பகுதியில் அன்றைய தினம் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்றும் —

அப்போதே இரு தரப்பினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாகவும் — சொல்லப்படுகிறது.

மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் உயிரிழந்தார் என்றும், அவரது சடலத்தை படையினர் எடுத்துச் சென்றனர் என்றும் தெரியவந்தது.

இம் மோதல் சம்பவம் குறித்து பாதுகாப்பு அமைச்சின் தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில், நான்கு கைக்குண்டுகளும், சயனைட் வில்லை ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(அ-90-4-3)

## செல்வா நினைவுத்தூபி முன்றலில் மலரஞ்சலியும் நினைவுக் கூட்டமும்

### புளொட் அமைப்பு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 29

தமிழ்த் தேசிய இனத்தின் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் 100 ஆவது வயது ஆரம்ப நாளான — 99 ஆவது வயது நிறைவு நாளான — நாளை மறுதினம் திங்கட்கிழமை அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்கான சிறப்பான ஏற்பாடுகளை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) செய்துள்ளது.

யாழ். நகரின் முற்றவெளிப் பகுதியில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு திங்கட்கிழமை மு. ப. 11 மணிக்கு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் மலரஞ்சலி செலுத்துவர்.

அதனைத் தொடர்ந்து நினைவுத் தூபி முன்றலில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/இணுவில் மத்திய கல்லூரி
## முறைசாராக் கல்வி தொழிற்திறன் அபிவிருத்திப் பயிற்சி - 1997

முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்படும்

### 'மோட்டார் இலத்திரனியல்'

பயிற்சிநெறிக்கு பயிற்சி பெற விரும்புபவர்களிடமிருந்தும், பயிற்றுவிக்க விரும்புபவர்களிடமிருந்தும் (போதனாசிரியர்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்று **05-04-1997** க்கு முன் விண்ணப்பிக்கவும். நேர்முகத் தேர்வு **07-04-1997** காலை 10-00 மணிக்கு நடைபெறும்.

**மு. திருஞானசம்பந்தபிள்ளை**
அதிபர்
யா/ இணுவில் மத்திய கல்லூரி.

(46035)

## புலமைப் பரிசில் 97

**23 - 03 - 97** இல் எம்மால்
எமது நிறுவனத்தில் நடத்தப்பட்ட
**16 ஆவது பரீட்சையில்**

### செல்வி சுகிர்தா சிறிவரதன்

முதன்மைப் புள்ளி பெற்றமைக்காகப் பாராட்டுகின்றோம்.
30 - 03 - 97 ஞாயிறு 17ஆவது பரீட்சை வழமை போல் நடைபெறும்.

**BOND INSTITUTES**
யாழ்ப்பாணம். (46038)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 10 — 1935

மறைவு: 01 — 04 — 1994

### அமரர் முத்துச்சாமி இராசரத்தினம்

[முன்னாள் செயலாளர், வலி. கிழக்கு பிரதேச சபை நீர்வேலி]

**திதி: 29-03-1997**

அன்பும் பாசமும் நிறைந்த ஐயா! எத்தனை கோடி ஆண்டு சென்றாலும் அணையாத விளக்காய் எமது உள்ளத்தில் ஒளிவீசும் உங்கள் புன்னகை தவழும் முகம் எங்கள் இதயத்தை விட்டகலா.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

''இராசரத்தினம் அன்பகம்'',
சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி. (46034)

## மருதடி விநாயகர் கொடியேற்றம்

மானிப்பாய், மார்ச் 29

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

ஈசுர வருடப் பிறப்பான அடுத்த மாதம் 14 ஆம் திகதி தேர்த் திருவிழா நடைபெறும்.

இம்முறை ஆலயத் திருவிழாக்கள் மிக அடக்கமான முறையிலும் எளிமையாகவும் நடைபெறும். (அ–90)

## ஆயுதங்களைத் தேடும் நடவடிக்கை

சட்டவிரோதமான ஆயுதங்களைக் கையளிக்க அளிக்கப்பட்ட கால அவகாசம் முடிவடைந்ததைத் தொடர்ந்து அந்த ஆயுதங்களைத் தேடும் 2 ஆம் கட்ட நடவடிக்கை கடந்த வியாழக்கிழமைஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## திருக்குறள் விழாவும் பரிசளிப்பும்

மூதறிஞர் க. சி. கு. நூற்பதிப்புக் கழகம் நடத்தும் திருக்குறள் விழாவும் பரிசளிப்பு வைபவமும் கழகத் தலைவர் பா. தனபாலன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இவ் விழாவின் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கல்விக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரத்தினம் கலந்து கொள்வார்.

இவ்விழாவின் சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி கல்விக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசாவும் மருதங்கேணி கல்விப் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் த. இராசலிங்கமும் கலந்து கொள்வர்.

சிறப்பு ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணனும், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் மா. வேதநாதனும் ஆற்றவுள்ளனர். (இ-118)

## தேவை

பலசரக்குக் கடைக்கு அனுபவமுள்ள விற்பனையாளர் தேவை.

**தொடர்பு: மு. கமலநாதன்**
**66B, கொழும்புத்துறை வீதி,**
**பாண்டியன் தாழ்வு**
**யாழ்ப்பாணம்.**
(46036)

## மரண அறிவித்தல்கள்

### M. E. கனகசபை

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது 23/1, சாளிமன் றோட், வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய M. E. கனகசபை அவர்கள் 17-03-97 இல் இந்தியாவில் காலமானார்.

இவர் மாரிமுத்துவின் அன்புக் கணவரும், சாந்தகௌரி (ரதி), பாலகௌரி (பாமா, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செ. சண்முகநாதன் (நீர்ப்பாசனத்திணைக்களம்), காலஞ்சென்ற திருவேந்திரன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிமால், நிசாந்தன் (லண்டன்), தாரணி, மீரா (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்:
**சு. சச்சிதானந்தன்**
(மருமகன்)

மணியம் ஸ்ரோர்ஸ்,
சூராவத்தை,
சுன்னாகம். (46023)

### இளையதம்பி செல்வநாயகம் (பத்தர்)

கொக்குவில் மேற்கு சொர்ணவடலியைச் சேர்ந்த இளையதம்பி செல்வநாயகம் பத்தர் அவர்கள் வெள்ளிக்கிழமை (28-03-97) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, இரத்தினேஸ்வரி, விமலேஸ்வரி, இராசேஸ்வரி, ஞானேஸ்வரி, கணேசலிங்கம் (நியூஸிலாந்து), சண்முகலிங்கம் (கனடா), சந்திரலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான வை. இரத்தினம், செ. அருளானந்தம், த. சிவசுப்பிரமணியம் மற்றும் நா. சண்முகலிங்கம், ஐ. சுந்தரமூர்த்தி, பிறேமகுமாரி, பவானி, நாகநந்தினி ஆகியோரின் அன்பு மாமனாருப் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29-03-97) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 1.00 மணியளவில் கோம்பையன் மணல்மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
**செ. சந்திரலிங்கம்**
(மகன்)

சொர்ணவடலி,
கொக்குவில் மேற்கு. (49040)

### திருமதி தங்கரத்தினம் தியாகராஜா

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி தங்கரத்தினம் தியாகராஜா 28-3-97 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் சின்னத்தம்பி தியாகராஜாவின் அன்பு மனைவியும், சுலோஜனா, ஜெயஸ்ரீ, ஜெயராஜா (USA), ஜெயஜீவா (கனடா), ஜெயவனா (கனடா), ஜெயகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கதிர்காமத்தம்பி (முன்னாள் ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), செல்வரட்ணம் (லங்கா சிமெந்து லிமிடெட், கொழும்பு), சிவசக்தி (USA), பற்குணராஜா (கனடா), சிவராஜபிள்ளை (கனடா), யசோதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி வைதேகி கேசவன் (யாழ். மருத்துவபீட மாணவி), தீபிகா (USA), சுஜேன், வைஷிகா, கௌஷிகா, சிந்திகா, நிவேதிகா, நீரதா (கனடா) ஆகியோரின் பிரியமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**திருமதி சுலோஜனா கதிர்காமத்தம்பி**
(மகள்)

விவசாயப் பாடசாலை முன்,
பலாலி வீதி,
திருநெல்வேலி. (46037)

### சின்னத்துரை சதாசிவம்

சங்கானையைப் பிறப்பிடமாகவும் விபுலானந்தர் வீதி, மாதகலை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை சதாசிவம் 03 - 03 - 1997 அன்று விசுவமடுவில் காலமானார்.

அன்னார் சதாசிவம் நாகம்மாவின் அன்புக் கணவரும், நாகேஸ்வரி, தெய்வேந்திரராஜா (கனடா), புஷ்பராணி, பத்மாவதி, காலஞ்சென்ற ஞானேந்திரராஜா மற்றும் சந்திராவதி, வசந்தகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுப்பிரமணியம், லீலாவதி (கனடா), இராசேந்திரம், கந்தசாமி, யோகராசா (ஹொலன்ட்), ரவிராஜ் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும். தயாளகுமார் (கனடா), காலஞ்சென்ற இந்திரகுமார் (வவி) மற்றும் புஷ்பலதா, தவக்குமார் (ஜேர்மனி), நந்தகுமார், தனேஸ்குமார், மேகலா, கோகிலா, சர்மினி (கனடா), சதேந்திரன் (கனடா), சரண்சியா (கனடா), இராஜகுலேந்திரன் (பிரான்ஸ்), மோகனதாஸ் (பிரான்ஸ்), கிருபாகரன், சங்கீதா, கார்த்திக், அருட்செல்வன் (ஜேர்மனி), தர்சினி, பத்மராஜ், நிஷாந்தினி, ஜெயந்தினி (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவர்கள்), நர்மதா, நர்மதன், நர்மதி, நர்மி, கவாஸ்கர் (சுவிஸ்), சுபாஸ்கர், (சுவிஸ்), சிவாஸ்கர் (சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04- 03- 97 அன்று விசுவமடுவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
**பத்மாவதி**
(மகள்)

நெல்லியடி முருகன் வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை. (C/390)

## நகரசபை, சாவகச்சேரி
## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து இரு பிரதிகளில் **16 — 04 — 97** ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதே தினம் முற்பகல் 10. 15 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

| வேலைகளின் விவரம் | வைப்புப்பணம் ரூபா | படிவக்கட்டணம் ரூபா |
|---|---|---|
| 1. உப்புக்கேணி வீதி மதவு அமைப்பு வேலை | 1000. 00 | 500. 00 |
| 2. மகளிர் கல்லூரி வீதி மதவு அமைப்பு வேலை | 1000. 00 | 500. 00 |
| 3. கிராம்புவில் ஒழுங்கை மதவு அமைப்பு வேலை | 1000. 00 | 500· 00 |

மேற்படி வைப்புப் பணத்தையும், கேள்விப் படிவக் கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் **10 — 04 — 97** ஆம் திகதி பகல் 12. 30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்பட மாட்டா.

சித்திகர கேள்விக்காரர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதும் வைப்புப் பணம் மீளளிக்கப்படும்.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

[illegible]
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
25 - 3 - 97 (சி/ 391)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# இந்திய - பாகிஸ்தான் பேச்சில் முன்னேற்றம்

## பிரதமர்கள் மே மாதம் சந்திப்பர்

புதுடில்லி, மார்ச் 29

மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே முதன் முறையாக உயர் நிலைப் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன.

இந்திய வெளியுறவுச் செயலாளர் சல்மான் ஹைதரும், பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலாளர் சம்ஸட் அகமத்தும் புதுடில்லியில் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான முறுகல் நிலை தணிய வழி வகுக்கும் என்ற தீவிர எதிர்பார்ப்பின் மத்தியில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில்—

தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையே உயர் மட்ட, உச்சிநிலைப் பேச்சுக்களை நடத்த இணக்கம் காணப்பட்டு அதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உயர் நிலைச் சந்திப்புக்கு முன்னர் — அதற்குத் தயாராகும் பொருட்டு இரு நாடுகளும் தொடர்ச்சியான நல்லெண்ண நடவடிக்கைகளை மேற்கொண்டன.

காஷ்மீர் பிரச்சினை குறித்து உடனடியான முன்னேற்றம் எதுவும் வெள்ளியன்று நடந்த பேச்சுக்களில் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றே எதிர்பார்க்கப்பட்டது.

இரு நாடுகளின் உறவுகளுக்கும் பெரிய முட்டுக்கட்டையாக காஷ்மீர் விவகாரம் இருந்து வருகிறது.

பாகிஸ்தானின் புதிய பிரதமராக நவாஸ் ஷெரிப் தேர்தல் மூலம் தெரிவானது முதல்இஸ்லாமாபாத்தும், புதுடில்லியும் நெருக்கடிக்குள் சிக்கியிருந்த தங்கள் உறவுகளைச் சற்று மேம்படுத்த முயற்சிகளை மேற்கொண்டன.

ஷெரீப் பிரதமராகப் பதவி ஏற்றதுமே இந்தியாவுடன் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்று அறிவித்தார்.

இம்மாத ஆரம்பத்தில் வெளியுறவுச் செயலர்கள் மட்டத்தில் பேச்சுக்களை ஆரம்பித்து பல சந்திப்புகளை நடத்த இரு நாடுகளும் இணங்கின.

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அயூப்கானுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஐ. கே குஜ்ராலுக்கும் இடையில் — அடுத்த மாதம் அணிசேரா நாடுகளின் மாநாட்டின்போது-சந்திப்பை ஏற்படுத்துவதற்கான அடித்தளத்தை அமைக்கும் முயற்சியில் வெள்ளியன்று இடம் பெற்ற பேச்சுக்கள் அமைந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மே மாதம் மாலை தீவுகளில் நடைபெறவுள்ள ''சார்க்'' மாநாட்டில் இரு நாடுகளின் பிரதமர்களும் நேரடியாகச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

உறவை மேம்படுத்தும் முயற்சியாக இந்தியாவுக்கு வரும் பாகிஸ்தான் உல்லாசப் பயணிகள் மீதும், வர்த்தகர்கள் மீதும் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதாக இந்தியா கடந்த வாரம் அறிவித்தமை தெரிந்ததே.

பாகிஸ்தானிய நூல்கள் சஞ்சிகைகளை இந்தியாவுக்குள் இறக்குமதி செய்ய விதிக்கப்பட்டுள்ள தடைச் சட்டத்தை விரைவில் நீக்கப் போவதாகவும் அறிவித்திருக்கிறது.

இந்திய அரசின் இந்த நல்லெண்ண நடவடிக்கைக்குப் பதில் நடவடிக்கையாக பாகிஸ்தான் தனது சிறைகளில் இருந்த 30 இந்தியச் சிறுவர்களை விடுவித்து இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது. (ஐ)

# கூட்டாகத் தற்கொலை செய்தோர் அமெரிக்க மதக்குழு உறுப்பினரே!

## அதிபர் கிளின்ரன் அதிர்ச்சி தெரிவிப்பு

கலிபோர்னியா, மார்ச் 29

அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் சன்டியாகோ என்ற இடத்தில் இடம்பெற்ற 39 பேரின் கூட்டுத் தற்கொலை அமெரிக்காவை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. ''இது நெஞ்சைப் பிளக்கும் அதிர்ச்சியான செய்தி'' என அதிபர் பில் கிளின்ரன் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

''உயர் ஆதாரம்'' (Highest Source) என்ற மதக் குழுவின் உறுப்பினர்களாகிய இவர்கள் தூக்க மாத்திரைகளை மிதமிஞ்சிய அளவில் மதுபானத்தில் அல்லது பழரசத்தில் கலந்து அதைக் குடித்து உயிரை மாய்த்திருக்கலாம் எனவும் இந்தத் தற்கொலைகள் நடந்து சுமார் ஆறு ஏழு நாள்களாகியிருக்கலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்கொலை செய்து கொண்டோர் பிரிவு உபசார ஒளிப் பேளை ஒன்றைத் தங்கள் குழுவின் நண்பர் ஒருவருக்கு அனுப்பி வைத்துள்ளனர். அதிலே ''இந்த ஒளிப்பேளை தங்கள் கைக்குள் கிடைக்கும் போது நாங்கள் எங்கள் கூடுகளான எங்கள் உடலை விட்டு மேலான ஒரு கிரகத்திற்குச் சென்றிருப்போம். மிகுந்த மன மகிழ்ச்சியுடனேயே செல்கிறோம்'' என எழுதப்பட்டிருந்தது.

தற்கொலை செய்து கொண்ட 39 பேரில் 21 பேர் பெண்கள், 18 பேர் ஆண்கள். இவர்கள் 20 வயதிலிருந்து 70 வயதிற்குட்பட்டவர்கள். இவர்களில் பெரும்பாலானோர் 40 வயதை உடையவர்கள்.

தங்களை இவர்கள் ''சொர்க்கத்தின் வாசல் குழுவினர்'' என்றும் அழைத்துக் கொண்டனராம். (ஐ-10)

# ஒரு லட்சம் ரஷ்ய தொழிலாளர்கள் கிரெம்ளினில் திரண்டு ஆர்ப்பாட்டம்!

மொஸ்கோ, மார்ச் 29

சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான ரஷ்யத் தொழிலாளர்கள் கடந்த வியாழனன்று நாடு தழுவிய வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

மொஸ்கோ நகர் கிரெம்ளின் சதுக்கத்தில் கூடிய சுமார் ஒருலட்சத்து 20 ஆயிரம் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நோயாளியான அதிபர் பொறிஸ் யெல்ட்ஸின் உடனடியாகப் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும். நாட்டில் என்ன நடக்கிறது என்பது அவருக்குத் தெரியாது என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

பணம் இல்லாத மக்கள் செத்துப் போவதே சிறந்தது என்பது தான் அதிபர் யெல்ட்ஸினின் கொள்கையாக இருக்கிறது என கம்யூனிஸ்ட் தலைவர் ஒருவர் குறிப்பிட்டார்.

ரஷ்யாவில் இலட்சக்கணக்கான ஊழியர்களுக்கு கடந்த பல மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை.

செர்னோபில் அணு மின் நிலைய விபத்து நடந்தபோது தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது மீட்புப் பணியில் ஈடுபட்ட பணியாளர்களுக்குக் கூட சம்பளம் வழங்கப்படவில்லை என வேதனையுடன் குறிப்பிட்டார் தொழிற்சங்கத் தலைவர் ஒருவர். (ஐ-10)

# உலக அரங்கு

# பாதுகாப்புச்சபை உறுப்புரிமை: இந்தியாவுக்கு மண்டேலா ஆதரவு



புதுடில்லி, மார்ச் 29

ஐ. நா பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைக்க தென்னாபிரிக்கா முழு ஆதரவை வழங்கும்.

தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா இவ்வாறு உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள அவர் இந்தியக்குடியரசுத் தலைவரைச் சந்தித்துப் பேசினார்.

நேற்று பிரதமர் தேவகௌடாவைச் சந்தித்த மண்டேலா அவருடன் இரு நாட்டு உறவுகள் வர்த்தகத் தொடர்புகள் குறித்துக் கலந்துரையாடினார். (ஐ)

# சதாமுக்குப் பின் பதவிக்கு வரும் ஈராக் அரசுடன் பேசுவோம்

## அமெரிக்க வெளியுறவுச் செயலர்

வாஷிங்டன், மார்ச் 29

ஈராக் அதிபர் சதாம் ஹுசேய்னுக்குப் பின்னர் ஈராக்கில் பதவிக்கு வரும் அரசாங்கத்தோடு பூர்வாங்கப் பேச்சுக்களைத் தொடங்க அமெரிக்கா தயாராக உள்ளது.

அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் திருமதி மடலின் ஆல்பிறைற் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய அரசு பதவிக்கு வந்தால் அதனுடன் பேசுவோம்; ஆனால் அதற்காக சதாம் ஹுசேய்னைப் பதவி கவிழ்க்க நாங்கள் எவரையும் தூண்டிவிடவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-10)

# மேற்கு கரையில் 10 ஆவது நாளாக தொடர்ந்து கலவரங்கள்

மேற்குக்கரை, மார்ச் 29

மேற்குக் கரைப் பகுதியில் பலஸ்தீனிய ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், இஸ்ரேலியப் படையினருக்கும் இடையேயான கலவரங்கள் கடந்த 10 நாள்களாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மேற்குக் கரையின் பிறிட்சேர்க் நகரிலும் கலவரங்கள் பரவியுள்ளன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இஸ்ரேலியப் பொலீஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தையும், றப்பர் துப்பாக்கி தோட்டா வேட்டுக்களையும் மேற்கொண்டு வருகின்றனர். இடையிடையே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை —

மத்திய கிழக்கு சமாதானத்துக்கான அமெரிக்கப் பிரதிநிதி டென்னிஸ் றோஸ் மொரோக்கோ நாட்டுக்குச் சென்றுள்ளார்.

இஸ்லாமிய மாநாட்டு அமைப்புடன் தொடர்புடைய ஜெருஸலேம் குழு என்ற அமைப்பின் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ள யஸீர் அரபாத்தும் மொரோக்கோ தலைநகருக்குச் சென்றுள்ளார். அங்கு அவர் அமெரிக்கப் பிரதிநிதியுடன் பேச்சு நடத்தினார்.

# 15 பேருக்கு சிறைத்தண்டனை

பஹ்ரெய்ன், மார்ச் 29

அரசைக் கவிழ்க்க முயற்சித்த சதித்திட்டம் ஒன்றில் சம்பந்தப்பட்ட 15 பேருக்கு பஹ்ரெய்ன் நாட்டு இராணுவ நீதிமன்றம் சிறைத்தண்டனை வழங்கியுள்ளது. இந்த சதித்திட்டத்துக்கு ஈரான் ஆதரவளித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சதி தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட 83 ஷியா முஸ்லிம்களில் சிலரும் தண்டனை பெற்றவர்களில் அடங்குவர். (ஐ)

# சக்கர நாற்காலியில் கிளின்ரன்

வாஷிங்டன், மார்ச் 29

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனுக்கு காலில் செய்யப்பட்ட சத்திர சிகிச்சை முற்றிலும் குணமாக வெகுநாள்கள் எடுக்கும் எனக் கூறப்படுகிறது. சக்கர நாற்காலியில் தான் அவர் தற்போது பணிமனைக்குச் சென்றுவருகிறார்.

''இந்த அனுபவம் புதிதாக இருக்கிறது. புதியனவற்றைக் கற்றுக்கொள்ள இது உதவுகிறது'' என்று கிளின்ரன் தெரிவித்தார். (ஐ-10)

# திரைப்படம் குறித்து மேலும் தகவல்

சயாதீன படத்தயாரிப்பாளர்களினால் தயாரிக்கப்பட்ட ''இங்கிலிஸ் பேஷன்ட்'' (ஆங்கில நோயாளி) என்ற திரைப்படம் 9 ஒஸ்கார் விருதுகளைப் பெற்றுள்ளமை தெரிந்ததே.

சாதாரண செலவுத் தொகையான மூன்று கோடி ரூபா செலவில் தயாரிக்கப்பட்ட இப்படம் வர்த்தக ரீதியாக பெரும் வெற்றியீட்டி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திரைப்படம் அமெரிக்காவில் மட்டும் கடந்த 19 வாரங்களில் 6 கோடி 30 லட்சம் டொலர் வசூல் பெற்று விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பனிக் காற்றினால் 100 பேர் பலி?

ஆப்கானிஸ்தானில் சலால் கணவாய்ப் பகுதியை பனிச் சூறைக் காற்றுத் தாக்கியதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகச் செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

சலால் நெடுஞ்சாலை தற்போது தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (ஐ-10)

# பிரிட்டனில் குண்டு வெடிப்பு

பிரிட்டனில் வடமேற்குப் பகுதியில் இரு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன.

வட கிழக்குப் பகுதியில் மற்றொரு குண்டு வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவல்களை அடுத்து ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

குண்டு வெடிப்பினால் உயிரிழப்புகள் ஏற்படவில்லை. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளின்றி இயங்கும் யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவகம்

## பணிப்பாளர் நாயகத்துக்கு மாணவர்கள் மகஜர்

யாழ்ப்பாணம், மார்ச் 29

அடிப்படை வசதிகள் மிகவும் குறைந்த நிலையில் செயற்பட்டுவரும் யாழ். உயர்தொழில் நுட்பக் கல்வி நிறுவகத்தை புனரமைக்கவும் தேவையான வசதிகளை வழங்கவும் கோரி இந்நிறுவன மாணவர் ஒன்றியம் 12 விடயங்களை உள்ளடக்கிய மகஜர் ஒன்றை இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்நிறுவகத்தைச் சேர்ந்த யாழ். மாணவர்கள் கடந்த 3 ஆண்டுகளாக உயர்பயிற்சி நெறிகளில் செயல்முறைப் பரீட்சைகளுக்குத் தோற்றாத நிலையில் உள்ளனர். தொழில் நுட்ப சாதனங்கள், கணனிகள் என்பன இல்லாததாலேயே இப்பரீட்சைகள் இங்கு நடைபெறவில்லை.

நாட்டின் ஏனைய பகுதிகளில் தொழில்நுட்பக் கல்லூரிகளின் கீழும், தனியாகவும் இந்த உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவக நிலையங்கள் சகல வசதிகளுடனும் இயங்கி வருகின்றன.

நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஜி. ரி. டி சில்வாவுக்கு அனுப்பப்பட்டுள்ள மகஜரில் மாணவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் வருமாறு:-

★ உயர் தொழில் நுட்ப நிறுவகம் யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் இருந்து தனித்துவமாக இயங்குதல் வேண்டும்.

★ இதற்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைத்தல்; அல்லது பொறுப்பெடுத்தல். அதுவரை காலமும் கட்டடம் ஒன்றை நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெறல்.

★ நிரந்தர இயக்குநர் ஒருவரையும், அலுவலக ஆளணியினரையும் நியமித்தல்.

★ நூல்நிலைய வசதிகளை உடன் ஏற்படுத்துதல்.

★ டிப்ளோமா பயிற்சி நெறிகளுக்குத் தேவையான கணனிகள், தட்டச்சு உபகரணங்களை வழங்குதல்.

★ தேவையான தளபாட வசதிகளை வழங்குதல்.

★ மாணவர் அனுமதி அட்டைகளுக்கு மேலதிகமாக விசேட அடையாள அட்டையினை உடன் வழங்க நடவடிக்கை எடுத்தல்.

★ மாணவர்களுக்கான உதவு தொகைகள், பொழுது போக்கு படிகளை வழங்குதல்.

★ விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்.

கீழ்வரும் பயிற்சிநெறிகளை புதிதாக ஆரம்பித்தல்.

★ முழுநேர, பகுதிநேர, பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா. (H-N.D.E)

★ முழுநேர, பகுதி நேர முகாமைத்துவ டிப்ளோமா.

★ முழுநேர. பகுதி நேர கணனியியல் டிப்ளோமா.

★ பகுதி நேர வியாபார கற்கைகளிலான தேசிய டிப்ளோமா. (N.D.B.S).

★ பகுதி நேர ஆங்கில தேசிய டிப்ளோமா. (N.D.E)

★ பாடத்திட்டங்களில் சேர்க்கப்படும் புதிய மாற்றங்கள், திருத்தங்கள் வருடா வருடம் அனுப்பப்பட வேண்டும்.

★ இலங்கை உயர்தொழில் நுட்பக் கல்வி நிறுவகம் தொடர்பாக வெளியிடப்படும் வர்த்தமானிப் பிரசுரங்களின் பிரதிகள் மாணவர் ஒன்றியத்துக்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேற்படி மகஜரின் பிரதிகள் இலங்கையில் உள்ள ஏனைய 16உயர் தொழில் நுட்ப கல்வி நிறுவக மாணவர் ஒன்றியங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

★ புத்தாண்டை ஒட்டி

## அரச ஊழியரின் சம்பளத்தை முன் கூட்டியே வழங்க ஏற்பாடு

குருநகர், மார்ச் 29

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ். மாவட்ட அரச ஊழியர்களுக்கு ஏப்ரல் மாதச் சம்பளத்தை ஏப்ரல் முதல் வாரத்திலேயே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கட்டுநிதி கிடைக்கும் பட்சத்தில் யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கான சம்பளத்தை ஏப்ரல் 10 ஆம் திகதி அளவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக யாழ். கல்வித்திணைக்கள கணக்குக்கிளை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கு வசதியாக ஆசிரியர் சம்பளப் பட்டியல்களை முன் கூட்டியே அனுப்பி வைக்குமாறு கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த சம்பள எழுதுவினைஞர்களை உரிய நிதி உதவியாளர்கள் பணித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-51)

## மகளிர் பொற்கணக்கு திட்டத்தில் யாழ். பெண்கள் இருவருக்கு பரிசு

யாழ்ப்பாணம், மார்ச் 29

இலங்கை வங்கியின் தேசிய ரீதியான ''மகளிர் பொற்கணக்கு'' குலுக்கல் பரிசுத் திட்டத்தில் கடந்த 28 ஆம் திகதி நடந்த சீட்டிழுப்பில் முதலாம் இரண்டாம் இடங்களை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்களான இரு பெண்கள் தட்டிக் கொண்டனர்.

இலங்கை வங்கியின் யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள இரண்டாம் கிளை வாடிக்கையாளரான திருமதி சிவராசா முதலாம் இடத்தையும், திருமதி சச்சிதானந்தமுதலி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இவர்களுக்கு இந்தியாவில் மும்பாய் சென்று திரும்புவதற்கான விமானப் பயணச் சீட்டும் ரொக்கப் பணப் பரிசும் வழகப்பட்டுள்ளன.

இதேவேளை — மேலும் ஆறு பெண்கள் தங்க நாணயப் பரிசில்களைப் பெற்றுள்ளனர். (ஐ)


இடம் மாற்றம்

சின்னண்ணை சயிக்கிள் வேக்ஸ்

வட்டுக்கோட்டையில் இயங்கிய கடை தற்போது

29—03—1997 தொடக்கம்

த. யோகேஸ்வரன்,

கலைவாணி வீதி, வடலியடைப்பு,

பண்டத்தரிப்பு.

என்னும் முகவரியில் இயங்குகின்றது. (9442)



★★★★★ வீல் மூவர்ஸ் ★★★★★

மணிக்கூட்டு வீதியில் இயங்கி வந்த

ஒட்டோ சப்ளையர்ஸ்

நிறுவனம்

தற்போது நல்லூர் கோயில் முன்பாக

வீல் மூவர்ஸ் என்ற பெயரில் இயங்கி வருகிறது

என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். எம்மிடம்:

- ✶ லான்ட்மாஸ்டர் குபோட்டா K 75, RK 80, யன்மார் 60
- ★ நீர் இறைக்கும் இயந்திரம், வில்லியர்ஸ், றொபின் வூல்சிலி மற்றும்
- ★ ஸ்ரீராம் ஹொண்டா முதலியவற்றின் உதிரிப் பாகங்களும் இவற்றுக்குரிய போர், சிலீவ் களையும் மொத்த மாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

ஒட்டோ சப்ளையர்ஸ்

(641, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.)

(46031)



தீபன்ஸ்

★ பந்தல் ★ கதிரை
★ ரம்ளர் ★ பீங்கான்
★ சமையற் பாத்திரம்
★ சோடினை என்பன வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

211, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(தற்போதைய நீதிமன்றம் அருகாமை)

(46024)


# யாழ். ப.நோ. கூ. சங்கங்களுக்கு 250 லட்சம் ரூபா கடன் உதவி

## மக்கள் வங்கி வழங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். மாவட்டத்தில் உள்ள ப.நோ.கூ. சங்கங்களின் செயற்பாட்டுக்கு 250 லட்சம் ரூபாவை மக்கள் வங்கி கடனாக வழங்க முன் வந்துள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு இந்தக் கடனை வழங்க முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வடக்கு — கிழக்குமாகாண கூட்டுறவு ஆணையாளர் திரு. சண்முகலிங்கம் அண்மையில் ப.நோ.கூ. சங்க அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து, குடா நாட்டில் இயங்கும் 23 சங்கங்களுக்கும் கடன் வழங்க இணக்கம் காணப்பட்டது.

கூட்டுறவு உதவி ஆணையாளரின் சிபார்சின் பேரில் மக்கள் வங்கி ப.நோ.கூ. சங்கங்களுக்கு கடன் வழங்க இருக்கிறது. (ஐ 3)

## பாடசாலை கிரிக்கெட் போட்டிகள் இரண்டாம் தவணை நடக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியை இரண்டாம் தவணையில் நடத்துவது என்று யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் முடிவு செய்துள்ளது.

சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் சங்கத் தலைவர் நா. க. சண்முகநாதபிள்ளை தலைமையில் நடந்த சமயம் இது தொடர்பாக முடிவு செய்யப்பட்டது.

இச் சுற்றுப் போட்டியை 15, 17 வயதுக்குக் கீழான இரு பிரிவுகளாக நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-3)

## தமிழர்கள் முடங்க வேண்டுமா?

எல்லைகள் நிரந்தரமானவை அல்ல. சமுதாயங்கள் மாறும் போது அவற்றை மாற்றி அமைப்பது அவசியம் என்று அரசமைப்பு, நீதித்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மட்டுமன்றி தமிழர் விடுதலைக் கூட்டணி கூட இவ் விடயத்தில் தமிழ் மக்களுக்கு பாதகம் செய்யும் விதத்தில் நடக்கிறது.

12 ஆம் திகதி இலங்கை வானொலி ''நாடும் நடப்பும்'' நிகழ்ச்சியில் தமிழர் கூட்டணியும், முஸ்லிம் காங்கிரஸும் ஓர் இணக்கத்திற்கு வந்துள்ளதாகக் கூறப்பட்டது. இதன் பிரகாரம் சம்மாந்துறை, கல்முனை அடங்கிய பிரதேசம் தென் கிழக்கு மாகாணம் எனவும், அம்பாறைப் பகுதி சிங்கள மாகாணங்களுடன் இணைக்கப்படும் என்றும் எஞ்சியவை வடக்கு — கிழக்கு மாகாணம் என அழைக்கப்படும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.

அம்பாறைப் பகுதியை சிங்கள மாகாணங்களுடன் இணைக்க ஒப்புக் கொள்ளும் தமிழர் கூட்டணி, திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சேருவில பகுதி மற்றும் வெலி ஓயா (இப்போது இது மாணலாறு அல்லவே!) பகுதியை சிங்கள மாகாணங்களுடன் இணைக்க ஏன் இணங்க மறுக்க வேண்டும்? இம் மாதம் 13 ஆம் திகதியன்று வெலி ஓயாப் பகுதியில் உள்ள புலிகளின் தளங்களை கடற்படை, ஆகாயப் படை தாக்கி அழித்தாக இலங்கை வானொலி செய்தி வெளியிட்டது. வெலி ஓயா பகுதி முழுவதும் முன்னர் தமிழர் குடியிருந்த பகுதிகள் என்பதனை மறந்துவிடலாகாது.

வாசகர் திருமுகம்

பேரினவாதிகள் 56 ஆம் 58 ஆம் ஆண்டுகள் தொடக்கம் 12 சதவீதத் தமிழருக்கு இலங்கையின் 1/3 நிலப் பரப்பையும், 2/3 பங்கு கடலோரத்தையும் வாரி இறைப்பது எப்படி நியாயம் ஆகும் என்று ஒப்பாரி இடுகிறார்கள். ஆனால் முழு வடக்கு — கிழக்கு மாகாணமும் தமிழர் பரம்பரைப் பிரதேசம் என்பதை அவர்கள் மறுக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதி கண்டி அரசன் கீழ் இருந்தது. ஆனால் அங்கு குடியிருந்தது ,தமிழர்களே தமிழருக்கு குடிசனத் தொகைக்கேற்பதான் காணி கொடுக்க வேண்டும் என்றால், இவர்கள் ஐக்கிய நாட்டை பின்வரும் விதமான தீர்மானத்தையன்றோ நிறைவேற்றுமாறு செய்தல் வேண்டும்:

அவுஸ்திரேலியா தனது ஒரு கோடி ஐம்பது லட்சம் குடி மக்களையும் நாட்டின் ஒரு மூலைக்குள் முடக்கிக் கொள்ளச் செய்து, மிகுதியை சீனரும் இந்தியரும் குடியேற இடம் கொடுக்க வேண்டும்

— இப்படி ஒரு தீர்மானம் சர்வதே மட்டத்தில் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே வட - கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதிக்குள் தமிழரும் ஒதுங்கிக் கொள்ளமுடியும்?

உரும்பிராய் தெற்கு, செ. அழகரத்தினம்.

## இனியேனும் துணிவு வருமா?

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் இனவாதிகளுக்கு நல்லதொரு பாடம் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். அரச தொடர்பு சாதனங்களும் இந்த விடயத்துக்கு தரும் முக்கியத்துவம் பாராட்டக்கூடியது.

அப்படியானால் இனியும் சமாதானத்துக்கான போர் என்ற இந்த அவலம் தொடரத்தான் வேண்டுமா? போரை உடன் நிறுத்தி சமாதானத்துக்கான வழிவகைகளைக் கண்டு நீதியான தீர்வு ஒன்றினை நிலைநாட்ட முடியாதா?

சமாதானத்தின் மீதான சிங்கள மக்களின் ஆர்வம் குறிப்பாக கிராமங்களில் வாழும் பெரும்பாலான மக்கள் நடந்து முடிந்த தேர்தலில் பொதுசன முன்னணி அரசுக்கு தந்த ஆதரவில் புலப்படுகின்றது.

மக்கள் உறுதியாக, துணிவாக மீளவும் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

அரசியல் வாதிகளுக்கும் அந்தத் துணிவு வரவேண்டுமே! அதுவே இன்றைய தேவை.

ச. நாகலிங்கம்

திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில ஆசிரியர் பயிற்சிநெறி பெற யாழ். மாணவருக்கு வாய்ப்பு மறுப்பு

## பரீட்சை நிலையங்கள் இங்கு இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 29

வடமாகாணத்தில் உள்ள 40 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரம் பேர் ஆங்கில ஆசிரியர்களாகப் பயிற்சி பெறும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இப்பகுதி மாணவர்களும், பெற்றோர்களும் அதிருப்தியும் கவலையும் கொண்டுள்ளனர்.

ஆங்கில ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை வடமாகாணத்தில் நடத்தப்பட மாட்டாது என்று சம்பந்தப்பட்ட நிறுவனம் அறிவித்துள்ளதே இதற்குக் காரணமாகும்.

உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் ஐந்து ஆங்கில மொழி நிலையங்களை அமைத்து நாடு முழுவதிலுமிருந்து சுமார் பத்தாயிரம் ஆங்கில ஆசிரியர்களைச் சேர்த்து பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் ஆங்கில மொழிக்கான மன்றம் (Institute of English Language) ஆள் சேர்க்கும் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களைக் கோரும் விளம்பரத்தை கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையில் வெளியிட்டிருந்தது.

இதனை அறிந்து விண்ணப்பித்த ஒரு சிலருக்கு விண்ணப்பப் படிவங்களும், விண்ணப்பிப்பது சம்பந்தமான விவரக்கொத்தும் அனுப்பி வைக்கப்பட்டன.

வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்களில் தேர்வுப் பரீட்சை நடத்தப்பட மாட்டாது என்று விவரக் கொத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இந்தப் பரீட்சை நடத்தப்பட மாட்டாது. இதனால் வடமாகாணத்திலுள்ள சுமார் 40 உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவிலுள்ள பரீட்சார்த்திகளுக்கு இப் பரீட்சையில் தோற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் சிவில் நிர்வாகம் கொண்டுவரப்பட்டு உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்படும் சூழ்நிலையில் வடமாகாணத்தில் இந்தப் பரீட்சையை நடத்தாதது வியப்புக்குரியது என்று மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வடமாகாணத்திற்கு ஆங்கிலப் பத்திரிகைகள் உரிய நேரத்திலும் போதுமான அளவிலும் வருவதில்லை. இதனால் அப்பத்திரிகையில் வெளியான விளம்பரத்தைப் பற்றி அறியும் வாய்ப்பு பலருக்கு கிடைக்கவில்லை. மறுபுறத்தில் அந்த விளம்பரத்தைப் பார்த்து வேறு மாகாணங்களிலுள்ள ஏதாவது பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்திருந்தால் கூட அந்தப் பரீட்சார்த்திக்கு அனுமதிச்சீட்டு உரிய காலத்தில் கிடைக்குமா என்பதும் அவ்வாறு அனுமதிப்பத்திரம் கிடைப்பினும் குடாநாட்டிலிருந்து அந்த இடத்திற்குச் சென்று பரீட்சைக்குத் தோற்ற கால அவகாசம் கிடைக்குமா என்பதும் சந்தேகமே.

இத்திட்டத்தின் படி வடமாகாணத்திலுள்ள சுமார் 40 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அமையவுள்ள சுமார் 200 ஆங்கில மொழி நிலையங்களில் சேர்ந்து பயிற்சி பெற சுமார் ஆயிரம் பேருக்கு வாய்ப்பு இல்லாமல் போயுள்ளது.

ஏப்ரல் மாதம் முதலாவது வாரத்தில் பரீட்சை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் யாழ்ப்பாணத்திலோ, வடக்கின் ஏனைய மாவட்டங்களிலோ பரீட்சை நடத்தப்படுமா என்பது குறித்து இதுவரை எவ்வித அறிவித்தலும் வெளியிடப்படவில்லை. (அ-10)

## முறைசாரா பயிற்சிநெறிக்கு விண்ணப்பம்

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படவுள்ள தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து, மொழித்திறன் அபிவிருத்தி ஆகிய பயிற்சி நெறிகளுக்கு பயிற்சி பெற விரும்புபவர்களிடமிருந்தும், போதனாசிரியர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறும், இதற்கான நேர்முகத் தேர்வு மறுநாள் 5 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நகருக்கு குடிதண்ணீர் விநியோகம்; டிராக்டர்கள், பவுசர்கள் வந்தன

## ஜேர்மன் தொண்டு நிறுவனம் உதவி

யாழ். மாநகரசபை எல்லைக்குஉட்பட்டகரையோரப் பகுதி மக்களின் குடிதண்ணீர் விநியோகத்துக்காக தண்ணீர் பவுசர்களும், டிராக்டர்களும், பிளாஸ்ரிக் தண்ணீர் தங்கிகளும் கப்பல் மூலம் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

வியாழனன்று இறக்கப்பட்ட நான்கு டிராக்டர்களும் இரண்டு ரெயிலர்களும், நான்கு பவுசர்களும் யாழ்ப்பாணம் மாநகரசபை அலுவலகத்துக்கு எடுத்துவரப்பட்டுவிட்டன.

மிகுதி 2 பவுசர்களும், 30 தண்ணீர் தாங்கிகளும், வாட்டர்பம்முகளும் நேற்று இறக்கப்பட இருந்தன.

ஜி. ரி. சற். என்றஜேர்மன் அரசாங்க உதவி நிறுவனமே இப்பொருள்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

இந்தப் பவுசர்கள் மூலம் திருநெல்வேலியில் இருந்து தண்ணீர் எடுத்து வரப்பட்டு கரையோரப் பகுதிகளில் அமைக்கப்படவிருக்கும் தண்ணீர் தாங்கிகளில் நிரப்பப்படும்.

கரையோரப் பகுதிகளில் சுமார் 16 தண்ணீர்த் தாங்கிகள் 16 இடங்களில் அமைக்கப்பட உள்ளன. பாஷையூர் பகுதியில் தண்ணீர் தாங்கி அமைப்பதற்கான வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

ஜி·ரி.சற் நிறுவனம் யாழ். மாவட்ட நீர் வழங்கும் அதிகாரசபையின் பிராந்திய அலுவலகத்தின் உதவியுடன், யாழ். மாநகர சபையின் மூலம் இந்தக் குடிதண்ணீர் விநியோகத்தைச் செயல்யடுத்துகின்றது.

தண்ணீர் விநியோகத்துக்காக பயன்படுத்தப்படவுள்ள சகல பொருள்களும் (டிராக்டர், பவுசர்கள் உட்பட) யாழ். மாநகரசபை ஆணையாளரிடமே கையளிக்கப்பட உள்ளன.

குருநகர், பிரதான வீதி மடத்தடி தண்ணீர் தாங்கிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த குடிதண்ணீர் விநியோகம், கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சேதமடைந்து தண்ணீர் விநியோகம் தடைப்பட்டிருந்தது.

இந்த தண்ணீர் தாங்கிகள், மற்றும் நீர் விநியோகத்தை மேற்கொள்ள உதவும் நீர்க்குழாய்கள் ஆகியவற்றின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு தண்ணீர் விநியோகத்தை மீண்டும் ஆரம்பிக்கும் பணியினையும் ஜி. ரி. சற் நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது.

இந்தப்புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாகும் வரையே பவுசர்கள் மூலம் தண்ணீர் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

# நலிவுற்ற யாழ். மக்கள் எதிர் நோக்கும் மலேரியா ஆபத்து; அதனை தடுக்க எடுக்கப்பட வேண்டிய நாளாந்த முயற்சிகள்

மலேரியா ''அனோபிலிஸ்'' என்கின்ற பெண் நுளம்பால் ஏற்படுகின்ற நோய் ஆகும். இந்த நுளம்பு உங்களைத்தேடி வருகின்றது. உங்களுக்குத்தெரிந்தோ தெரியாமலோ உங்களைக் கடிக்கின்றது. உங்கள் இரத்தத்தை உறிஞ்சுகின்றது, உங்களுக்கு மலேரியா இருந்தால் அந்த கிருமிகளையும் சேர்த்து உறிஞ்சிக் குடிக்கின்றது. பின்னர் அந் நுளம்பு சென்று இன்னொருவரைக் கடிக்கின்றது. அப்பொழுது மலேரியாக் கிருமிகள் நுளம்பின் உமிழ் நீருடன் சேர்ந்து இருப்பதனால் அவருடைய இரத்தத்தில் மலேரியாக் கிருமி சேரும் போது அவர் மலேரியா நோயாளியாக மாற்றப்பட்டு விடுகின்றார். இப்படித்தான் இந்த மலேரியா ஒருவரில் இருந்து மற்றவருக்கு அதாவது குழந்தைகள், சிறுபிள்ளைகள், பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் என்ற வேறுபாடின்றி எமது சமூகத்திலுள்ள பலரையும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது.

மலேரியாவைக் கட்டுப்படுத்துவதென்றால் மேற்படி பெண் நுளம்பின் பெருக்கத்தினை தடுத்தல் வேண்டும். தேங்கி நிற்கின்ற அழுக்கான நீரிலேயே நுளம்பு தனது முட்டைகளை இட்டுப் பெருக்கமடைகின்றது. எனவே அழுக்கு நீர் எங்கே தேங்கி நிற்கின்றது என்பதனைக் கண்டறிதல் வேண்டும்.

உடைந்த போத்தல்கள், பழைய சமையற் பாத்திரங்கள், பழைய தகரப் பேணிகள், பழைய ரயர்கள், இளநீர், தேங்காய், கோம்பைகள், கிணற்றடியில் குளிக்கின்ற கழிவு நீர் தேக்கங்கள், சமையல் அறையில் இருந்து வெளியேறும் கழிவு நீர்த் தேக்கங்கள், ஆட்டு, மாட்டுத் தொழுவங்களில் இருந்து வெளியேறும் கழிவு நீர் ஆகிய இடங்களில் நுளம்பு முட்டை இட்டு பன்மடங்கு பெருகுகின்றது —

எனவே இவ்வாறான சூழலை அடிக்கடி சுத்தம் செய்தல் வேண்டும். அழுக்கு நீர் தேங்கி நிற்கக் கூடிய பழைய பொருள்களை எரித்தோ அல்லது கிடங்கு வெட்டிப்புதைத்தல் வேண்டும். இதன் மூலம் அழுக்கு நீர் தேங்கி நிற்பதைத் தடுக்கலாம். நுளம்புப் பெருக்கத்தினைத் தவிர்க்கலாம். மலேரியா பரவுவதையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

### வீதியோர கால்வாய்கள்

யாழ். நகர எல்லைக்குள் வீதி ஓரங்களில் பல வடிகால்கள் அடைபட்டிருக்கின்றன. இவற்றில் அழுக்கு நீர் பரவலாக தேங்கி நிற்கும். இதில் நுளம்பு ஏராளமான முட்டைகளை இட்டு பெருமளவில் பெருகும் வாய்ப்பு உண்டு. இதனால் யாழ்.மாநகரத்தினுள் மலேரியா நோயும் பெருமளவில் பெருகுகின்றது. இதனை உரிய அதிகாரிகள் உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து கழிவு நீர் தேங்கி நிற்பதைத் தவிர்த்துக் கொள்ள முன்வர வேண்டும். முன் வந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதனையும் நாங்கள் ஒரு போதும் மறக்க முடியாது.

யாழ். மாநகர வாழ் மக்களாகிய நாங்கள் வடிகால்கள் தடை அடைபடு முகமாக அழுக்குளை வடிகால்களினுள் போடுவதைத் தவிர்ப்போம், அதனால் நுளம்புப் பெருக்கத்தினைத் தவிர்ப்போம்; பலர் மரணத்தினைத் தவிர்ப்போம்; நுளம்புத் திரிக்குச் செலவாகும் பணத்தினை மீதப் படுத்திக் கொள்வோம்..

### உணவுச் சாலைகளில்

தேநீர்க் கடைகள், உணவகங்கள் என்பனவற்றின் உரிமையாளர்கள் கடைகளில் பின் புறங்களில் அழுக்கு நீர் தேங்கி நிற்பதை அடிக்கடி சுத்தம் செய்தல் வேண்டும். அழுக்கு, கழிவு நீர் தேங்கி நிற்காமல் வழிந்தோட வழி செய்தல் வேண்டும். இதன் மூலம் நுளம்புப் பெருக்கத்தினை கட்டுப்படுத்தலாம். மலேரியா பரவுவதைத் தடுக்கலாம்.

### நோய் அறிகுறி

காய்ச்சல் இடைவிட்டு வருதல், கடுமையான குளிரும், குளிருடன் நடுக்கமும் ஏற்படுதல், தலையிடி, வயிற்றோட்டம் ஏற்படுகின்றதா? இவை மலேரியாவுக்கு ஆரம்ப அறிகுறிகள். நேரத்தை வீணாக்காமல் அருகில் உள்ள வைத்தியரை அணுகி அவரின் ஆலோசனையுடன் மருத்துவ ஆய்வு கூடமொன்றில் ஆய்வு கூடத் தொழில் நுட்ப உத்தியோகத்தர் மூலம் இரத்தப் பரிசோதனை செய்து நோயை உறுதிப்படுத்திக் கொண்டு நோய்க்குரிய மருந்து வில்லைகளை வைத்தியரின் ஆலோசனையுடன் சரியான நேர இடை வெளியில் குடித்து முடிக்க வேண்டும். மருந்து வகைகளை அரைவாசியில் நிறுத்தக் கூடாது இதனால் பல விளைவுகளும் ஏற்படும்.

திருப்திகரமான சுகம் இல்லாவிடில் மேற்கொண்டு வைத்திய நிபுணரிடம் ஆலோசனையைப் பெறுதல் வேண்டும்.

### மலேரியா பரப்பும் நுண்ணங்கிகள்

★ பிளாஸ்மோடியம்பல்சிப்பாரம் Plasmodium Falci - param)

★ பிளாஸ்மோடியம் வைவக்ஸ் (Plasmodium Vivax)

★ பிளாஸ்மோடியம் ஓவாக்ஸ் (Plasmodium Ovax)

★ பிளாஸ்மோடியம் மலேரியா (Plasmodium Malaria) ஆகியனவே மலேரியாவைப் பரப்பும் நுண்ணங்கிகள் ஆகும்.

ஆனால் பிளாஸ்மோடியம் பல்சிப்பாரம், பிளாஸ்மோடியம் வைவக்ஸ் மட்டுமே எமது பிரதேசத்தில் காணப்படுகின்றன. இதிலும் பிளாஸ்மோடியம் பல்சிப்பாரம் என்கின்ற மலேரியாக் காய்ச்சல் தான் மிகவும் கடுமையானது (Malignant Malaria) இவற்றை ஆய்வுகூட இரத்தப் பரிசோதனை மூலம் வேறுபடுத்திக் கண்டறியலாம்.

செ. செல்வரட்ணம்
(ஆய்வு கூட தொழில்நுட்ப. உத்தியோகத்தர்)

★ கடுமையான இரத்த. சோகை (Severe Anaemia)

★ களைப்பு, இளைப்புச் தலையிடி, தலைச்சுற்று, சோர்வு, பஞ்சி, கால்கள் வீக்கமடைதல், நெஞ்சில் வலி, அடிக்கடி இருமல் என்பன ஏற்படும்.

★ வயிற்றில் வளரும் குழந்தையின் வளர்ச்சி வீதம் பாதிக்கப்படும். (Growth Retardation)

★ நிறைகுறைந்த(Low Birth Weight Baby) குழந்தை பிறக்கும் ஆபத்தும் இருக்கின்றது.

எனவே கர்ப்பிணித்தாய்மார்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

தற்போது எமது மாவட்டத்தில் உள்ள மக்கள் பல்வேறு வழிகளிலும் நலிவுற்றுள்ளனர். குறிப்பாக சுகாதார வசதிகள் மிகக் குறைவாகவே காணப்படும் இக்கால கட்டத்தில் எமது பகுதியில் பரவும் பல்வேறு நோய்களில் மலேரியா நோயும் ஒன்றாகக் காணப்படுகிறது. எனவே நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதன் மூலம் இந்நோயின் தாக்கத்தை ஓரளவு கட்டுப்படுத்தலாம்.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Broiler(புறொயிலர்)இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. வாடிக்கையாளர்களுக்கு விலைக்கழிவு கொடுக்கப்படும். இல.101, இலுப்பையடிச்சந்தி, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (46019)

பத்து நாள்களில் குட்டி ஈணவிருக்கும் சுத்த சணல் ஆடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க. சுதாகர சர்மா அரச கால்நடை வைத்திய வளவு, K. K. S. வீதி, சுன்னாகம் (மண்ணெய் நிரப்பு நிலையம் அருகாமை). (9436)

National T. V. 20'', ஜமகா ஜெனரேற்றர் (650w), 2K.w டைனமோ 1500 (R.P.M.) Stabiliser (1KVA), பொமனேரியன் நாய்க்குட்டி என்பன விற்பனைக்குண்டு. ம. சுரேந்திரஜித், 183, சென். ஜேம்ஸ் லேன், யாழ்ப்பாணம். (தற்போதய நீதிமன்ற முன் ஒழுங்கை) (46025)

இறைச்சிக் கோழி [புறொயிலர்] விற்பனைக்குண்டு, தொடர்பு: 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (46026)

பல வகையான செவ்வரத்தம் கன்றுகள் விற்பனைக்குண்டு. பிளான்ட் பரடைஸ், இல. 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (46027)

பழைய திராந்தி 12, 10 அங்குலம் (பாலைமரம்), பனை மரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு. திரு. மனோகரன், 506 (202), கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். (46028)

இறைச்சிக் கோழி (புறொயிலர்) விற்பனைக்குண்டு. விலை 1Kg. 150/- சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (46029)

### மணமகன் தேவை

பட்டதாரி 28 வயது மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை. அம்பாள் திருமண சேவை, ஸ்ரீலங்கா அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். (46017)

### மணப்பெண் தேவை

இந்து; கௌரவ குடும்பம். 33 வயது குற்றமற்ற குறிப்பு, படித்துள்ள இங்கிலாந்திலுள்ள மணமகனுக்கு இங்கிலாந்தில் மணமகள் தேவை. ''சேவை நம்பகம்'' விவாக சேவை; வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (46015)

### திருமணசேவை

சகல மணமக்களது பெற்றோர்களும் எமது சேவையில் குறிப்புகள் படங்களுடன் நேரில் இணைவது பொருத்தமான விரைவான திருமணங்களுக்குரிய வழியாகும். ''சேவை நம்பகம்'' விவாக சேவை, வைமன் வீதி, யாழ்ப்பாணம். (46016)

### நூலாலயம்

'நூலகம் அறிவின் தாயகம்' ஈழத்து - தமிழகப் படைப்பாளிகளின் புதிய வெளியீடுகளை வாசித்துப் பயனடைய விஜயம் செய்யுங்கள்: லிங் லெண்டிங் லைப்ரறி Ling Lending Library, சாவகச்சேரி. (45932)


## ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்

புது வருடத்தை முன்னிட்டு
மாபெரும் சிறப்புத் தள்ளுபடி
விற்பனை

★ ஆடவர்களுக்கேற்ப டிசைன்களில்
சேட்டிங்- சூட்டிங் வகைகள்

✶ மகளிர்களுக்கேற்ப டிசைன்களில்
சாறி வகைகள், ஸ்கேட் அன் பிளவுஸ், கவுன் வகைகள்

★ சிறுவர்களுக்கேற்ப டிசைன்களில்
அழகான ஆடை வகைகள்
மற்றும்
சகல விதமான துணி வகைகளுக்கும்

ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
(46022)


## 31 ஆம் நாள் நினைவாக



தோற்றம்: 03 — 02 — 1912

மறைவு: 27 — 02 — 1997

### திருமதி சீனியர் தெய்வானை

இன்று 29-03-97இல் நடைபெறும் எமது அன்புத் தாயாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

''அன்னை இல்லம்'',
துன்னாலை தெற்கு,
கரவெட்டி. (46010)

## ஓராண்டு நினைவினில் ஓயாத துயரினில்



மலர்வு: 24 — 04 — 1992

உதிர்வு: 29 — 03 — 1996

### சின்னத்தம்பி சிந்துசன் (சிந்து)

எமையெல்லாம் சிரிக்க வைத்து
மகிழ்ச்சியிலே திளைக்க வைத்து
சிரித்து விளையாடிய சிந்துவே!
யமன் வந்தான் பாம்பாக
வானுலகு நீ சென்று
ஆண்டு ஒன்று ஆனதய்யா.
நீ பேசிய எண்ணற்ற மழலைகள்
சிந்து உன்வாயால் அதை
இனி எப்போ நாம் கேட்போம்?
பார்போற்றும் மாமனிதனாய் வாழ்வாயென
மகிழ்ச்சியுடன் நாம் இருந்தோம்
எங்கே நீயும் சென்றாயய்யா?
மீண்டும் பிறந்தால் சிந்துவே
எமக்கே செல்வனாய் வர
வேண்டுகின்றோம் இறைவனை.
உன் ஆத்மா சாந்தி பெற
இறைஞ்சுகின்றோம் இறைவனை.
சாந்தி! சாந்தி! சாந்தி!

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அக்கா மற்றும்
உறவினர்கள்.

சின்னத்தம்பி ஜெயா,
மீசாலை வடக்கு,
கொடிகாமம். (சி/358)

## தேங்காய் விலை அதிகரிப்பு

குருநகர், மார்ச் 29
யாழ்ப்பாணத்தில் தேங்காயின் விலை உயர்வடைந்து செல்வதை தற்போது அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கடந்த சில மாதங்களின் முன்னர் ஐந்து ரூபாவுக்கு விற்கப்பட்ட தேங்காய் தற்போது ஒன்பது ரூபாவாக விற்கப்படுகிறது. (ஐ-51)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 04 — 08 — 1910

மறைவு: 27 — 02 — 1997

### திருமதி இராசம்மா வல்லிபுரம்

எங்கள் குடும்பத்து ஒளிவிளக்காய் இருந்து, எம்மை விட்டகன்ற எமது அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும், பல வழிகளிலும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவரின் பிரிவால் ஆறாத்துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'குமரகோட்டம்',
கோண்டாவில். (46008)

## 31ஆம் நாள் நீங்காத நினைவலைகளும் நன்றி நவிலலும்



மலர்வு: 07 — 08 — 1930

உதிர்வு: 27 — 02 — 1997

### அமரர் ஐயாத்துரை சிதம்பரநாதன் (குரு)

(ஓய்வுபெற்ற பாரவாகன இயக்குநர், சிமெந்துத் தொழிற்சாலை K. K S., ராகினி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் K. K. S.)

சீர்பெருகச் சிறப்பளித்துச் சிந்தித்தென்றும்
சிறந்திட நற்கல்வியொடு பண்புகளையூட்டி
பேர் பெறவே பெருநினைவில் திளைத்த தலைவா!
பெருமையோடு கே. கே. எஸ்சில் உழைத்து
நேர்வழிக்கு இடும்போது இடம்பெயர்வுத் துன்பம்
பாதிவழிச் சுமையாகப் பட்டே மறையச்
சேர்வழியின் பயணத்தால் உருகிச் சோர்ந்தோம்
செந்தணலில் வேகுகின்றோம் பிரிவால் நொந்து

குடும்ப விளக்கின் ஒளி மறைந்தரற்ற
குலவிய சுற்றமே கூடிநின்றுடனாய்
அடுதுயர்க்குதவி ஆறுதல் தந்தீர்
தம்துயர் போன்று எம் இல் ஏகி
கடுதொலை பாராதொரு துணை நிற்க
நுண்கலையினரும், முத்துத் தம்பியும்
படுதுயர் புகுந்து பந்தமாய் இணைந்தீர்
வருதுயர் செய்தி தனை மனம் பதித்து
எடுதொலைத் தந்தி ஆறுதல் வரிகள்
எமக்களித்தோர்கள் அனைவர்க்கும் நன்றிகள்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
துணைவி, பிள்ளைகள்.

குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில். (45998)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அவசரத்தின் நோக்கமெது?

கடந்த வாரம் தென்னிலங்கையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் அரசாங்கத்துக்குப் பெரு வெற்றி என்று கணிக்கப்படுகிறது ஆளுங் கட்சிக்கு மக்களிடையே உள்ள ஆதரவை உறுதி செய்வதாக அமைந்து விட்டது என்றும் எடுத்துக் காட்டப்படுகிறது. சரிதான்.

1994 பொதுத் தேர்தல் காலத்தில் ஆளுங்கட்சிக்கு இருந்த ஆதரவை விட, இப்போது அதிகரித்துள்ளது என்றும், ஐ. தே. கட்சிக்கு அப்போதிருந்த மக்கள் ஆதரவு இப்போது குறைந்து விட்டது என்றும் தானங்களைப் பின்னிக் கணக்குக் காட்டுவதில் அமைச்சர்கள் தொடக்கம் பின்னாசன எம். பிக்கள் வரை ஈடுபட்டிருக்கின்றார்கள்.

இத்தகைய ஒரு பின்னணியில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி, அரசுக்கு இப்போது நாடாளுமன்றத்தில் உள்ள வாக்குப் பலவீனத்தை இல்லாமற் செய்து விட வேண்டும் என்ற விருப்பமும் ஆளுங்கட்சி வட்டாரங்களில் நிலவுகின்றதாம்.

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்கு இணங்க அரசியல்வாதிகள் திடீர்ப்பொதுத் தேர்தல் குறித்து ஆராய்வது ஒன்றும் தவறு என்றில்லை.

ஆனால் அத்தகைய ஒரு தேர்தல் மூலம் ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் எதிர்பார்ப்பது என்ன அல்லது அவர்களின் நோக்கம் என்ன, அந்நோக்கம் எதனை நாடியது என்பனவே முக்கியமானவை.

ஆளுங்கட்சியினர், உள்ளூராட்சித் தேர்தலோடு சூட்டோடு சூடாகப் பொதுத் தேர்தலையும் வைத்துவிட வேண்டும் என்று விரும்புவதற்குப் பல காரணங்களும், நோக்கங்களும் இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

திடீர்ப் பொதுத்தேர்தலை நடத்தினால் சிறுபான்மை இனத்தவரது கட்சிகளின் ஆதரவின்றியே அரசு ஆட்சி நடத்த முடியும். இப்போதுள்ளது போல நூலிழையில் ஆடத் தேவையில்லை என்ற கருத்தே ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் பலரிடம் நிலவுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுத் தேர்தலை நடத்தினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற முடியும். அத்தகைய ஒரு பெறுபேறு கிடைத்தால் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணலாம். தெற்கின் இனவாத சக்திகளின் எதிர்ப்பை முறியடிக்கலாம் என்ற நோக்கத்துடன் திடீர்ப் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் அது நல்ல நோக்கம் என்று சொல்லலாம்,

அதற்குப் பதிலாக பெரும்பான்மை சமூகத்தினரைக் கொண்ட பலம் வாய்ந்த அரசு ஒன்றை அமைப்பதில் அவசரம் காட்டுவது, தமிழர் பிரச்சினைக்கான தீர்வைப் பின் தள்ளுவதில் ஆளுங் கட்சியினர் ஆர்வம் கொண்டுள்ளனரா என்ற சந்தேகத்தையே எழுப்பும்.

பெரும்பான்மைச் சமூகத்தினரைக் கொண்ட மிகப் பலமான அரசு அமைக்கப்பட்டால், தாம் நினைத்த தீர்வு ஒன்றைத் தமிழர் மீது திணித்து விடுவது சுலபம் என்ற சிந்தனையும் ஆளுங் கட்சி வட்டாரங்களில் பிறந்துள்ளதோ என்ற சந்தேகத்தையும் உண்டாக்குகிறது.

# வன்செயலில் உயிரிழப்போருக்கான மரணச் செலவுப் பணம் நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

வன்செயல் சம்பவங்களின் போது உயிரிழப்பவர்களின் இறுதிக் கிரியைச் செலவுக்காக 2 ஆயிரம் ரூபா வழக்கும் திட்டம் யாழ். மாவட்டத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

வன்செயல் சம்பவங்களால் இறப்பவர்களின் இறுதிக் கிரியைகளைச் செய்வதற்காக அவர்களது குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா முன்னர் வழங்கப்பட்டு வந்தது.

1995 ஆம் ஆண்டுக்குப் பின் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்றும்—

இந்தக் கொடுப்பனவைப் பெற ஏராளமானவர்கள் விண்ணப்பித்திருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## சமய, கலாசார கலந்துரையாடல் திங்களன்று

யாழ்ப்பாணம், மார்ச் 29

வடக்கு மீள் குடியமர்வு புனரமைப்பு அதிகார சபையின் தலைவர் சோமபால குணதீரவுடன் சமய, கலாசார துறையினர் கலந்துரையாட எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வு ஒருநாள் முன்னதாக திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு செயலகத்தில் நடத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## பல்கலைக் கழக மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். பல்கலைக் கழக பீடங்களுக்கு இடையேயான மெய்வல்லுநர் போட்டிகள் இன்று காலை 8 மணி முதல் பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

இந்த நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மாலை 4 மணிக்கு திருமதி. ஆர். பாலசுந்தரம்பிள்ளை பரிசில்கள் வழங்குவார்.

போட்டிகளின் இடைவேளை நேரமான பிற்பகல் 2 மணிக்கு ''ஜிம்னாஸ்ரிக்'' நிகழ்வு இடம்பெறும். (இ-3)

## நம்பிக்கை மோசடி வழக்கில் ஐ. தே. கட்சி எம். பிக்கு ரூ. 50 ஆயிரம் பிணை

நம்பிக்கை மோசடி வழக்கு ஒன்றில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஐ. தே. க. தேசிய பட்டியல் எம். பியான டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவை 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல கொழும்பு நீதிவான் டி. ஜெயவிக்கிரம அனுமதித்ததுடன் அவரின் கைவிரல் அடையாளத்தையும் பெறுமாறு உத்தரவிட்டார்.

92-93 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் பணியாற்றிய இவர் வேலை செய்யாமல் சம்பளமாக ஒருலட்சத்து 4 ஆயிரத்து 300 ரூபாபெற்று மோசடி செய்ததாகவும்—

92 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் தனது கடமையைச் செய்யாதுபிழையான தகவல் கொடுத்ததன் பேரில் 21 ஆயிரத்து300ரூபா இழப்பு ஏற்படக்காரணமாக விருந்ததாகவும்— இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (இ-3-150)

## மின் மாற்றி தகர்ப்பு

கொழுப்பு, மார்ச் 29

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள மின்மாற்றி ஒன்று கடந்த புதனன்று நண்பகல் இனந்தெரியாதோரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. (ஐ)

## சாவகச்சேரியில் 'ஈஸ்ரர்' நிகழ்வுகள்

தென்மராட்சி, மார்ச் 29

உயிர்த்து எழுந்த திருநாளை முன்னிட்டு சாவகச்சேரி தென் இந்திய திருச்சபையினர் சிறப்பு நிகழ்வுகளை நாளை பிற்பகல் 3.00 மணிக்கு திருச்சபை மண்டபத்தில் நடத்தவுள்ளனர். (இ-117)

## விளையாட்டு நிகழ்வுகள்

அச்சுவேலி, மார்ச் 29

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை அதிபர் திருமதி. ச. கனகராசா தலைமையில் நடைபெறும். (இ-11)

## ராஜீவ் கொலையுடன் சம்பந்தப்படுத்தி எனது அரசியல் வாழ்வை முடிவுக்கு கொண்டுவரச் சதி

### ஜெயலலிதா குற்றச்சாட்டு

சென்னை, மார்ச் 29

ராஜீவ் காந்தி கொலையாளிகளுடன் தாம் நின்று கொண்டிருப்பது போன்று சில பத்திரிகைகளில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட புகைப்படங்கள் இந்தக் கொலை வழக்கில் தம்மைச் சம்பந்தப்படுத்துவதற்கும் தமது அரசியல் வாழ்வை முடிவுக்கு கொண்டுவருவதற்குமான சதியாகும் என்று முன்னாள் தமிழகமுதலமைச்சர் செல்வி ஜெயலலிதா குற்றஞ்சாட்டி உள்ளார்.

ராஜீவ் காந்தி கொலையாளிகள் போல் தோற்றமளிக்கும்செல்வி. தாட்சாயினியும், நஞ்சகௌடாவும் தமதுகட்சி உறுப்பினர்கள் என்றும்—

இவர்கள் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் என்றும்— ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

செய்தியாளர்களுக்குஅடையாளம் காட்டுவதற்காக அவர்கள் இருவரும் நேற்றைய கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். (இ-4)

## கோப்பாய்ப் பகுதி அ. அட்டைகள்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் தெற்கு பிரிவில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டைகளின் விநியோகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை கோண்டாவில் (இ. போ. ச.) டிப்போவுக்கு அருகில் நடைபெறும். (இ)

# அடகு நகைகளை இங்கே வைத்து வழங்குதற்கு மக்கள்வங்கி ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகள் யாழ்ப்பாணத்திலேயே வைத்து வழங்கப்படும்.

இதற்கான நடவடிக்கை இப்போது எடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் வங்கியின் வடக்கு வலய உதவிப் பொது முகாமையாளர் திரு. எஸ். சிவசிதம்பரம் தெரிவித்தார்.

ஏற்கனவே மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைத்த நகைகளுக்கான பணத்தை யாழ்ப்பாணத்தில் செலுத்துவதற்கும்—

பின்னர் அந்தப்பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் கொழும்பில் நகைகளை மீட்கவும் — ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் பணம் செலுத்துபவர்களின் நகைகளை விசேட ஏற்பாட்டின் கீழ் கொழும்பில் இருந்து எடுத்து வந்து யாழ்ப்பாணத்திலேயே வைத்து ஒரு குறிப்பிட்ட நாளில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்திலேயே அடகு நகைகள் வழங்கப்பட இருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது, (அ-3)

## பாராட்டு விழா

நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களாகப் பணியாற்றி இளைப்பாறியவர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறும்.

நல்லூர்க் கோட்ட அதிபர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இவ் விழாவில் இளைப்பாறிய அதிபர்களான அ. பஞ்சலிங்கம் (யாழ். இந்துக் கல்லூரி) சி. வைகுந்தசாமி( நல்லூர் ஸ்தான .சி. சி வித்தியாலயம்), மு. பரமேஸ்வரன் (செங்குந்தா இந்துக் கல்லூரி), ஞா. வ மாணிக்கவாசகர் (நல்லூர் ஞானோதயா வித்தியாலயம்), நாக. பரமசாமி (ஆனந்தா வித்தியாலயம்), சி. பாலசிங்கம் (அரியாலை கிழக்கு அ. த. க வித்தியாலயம்.) ஆகியோர் பாராட்டப்படவுள்ளனர்.

## மெய்வல்லுநர் அலுவலர் பரீட்சை; தமிழ்மொழி மூலமும் நடக்கும்

கொழும்பு, மார்ச் 29

கொழும்பு அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள மெய்வல்லுநர் அலுவலர்களுக்கான பரீட்சை அடுத்தமாதம் 27 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இம்முறை முதற்தடவையாக தமிழ் மொழியிலும் இப்பரீட்சை நடத்தப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத் தலைவர் ரஞ்சித் வீரசேன வவுனியா மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கச் செயலாளர் த. ம. தேவேந்திரனிடம் இது தொடர்பான உறுதிமொழியை அளித்துள்ளார்.

சுவட்டு நடுவர், மைதான நடுவர், ஆரம்பிப்பாளர், நேரக்கணிப்பாளர் ஆகியோரைத் தெரிவு செய்வதற்காக தனித்தனியாக நான்கு பரீட்சைகள் நடத்தப்படும். ஒருவர் எத்தனை பரீட்சைகளுக்கும் தோற்றமுடியும். ஆனால் அதற்குத் தனித்தனியாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை ''மெய்வல்லுநர் தலைமைச் செயலகம், ரிட் அவெனியூ, கொழும்பு 7'' என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அடுத்த வாரம் நாடு முழுவதும் மழை பெய்யும்?

கொழும்பு, மார்ச் 29

இன்னும் ஒரு வார காலத்தில் நாடு முழுவதும் பரவலாக மழை பெய்யும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாளை

பங்குனி 17

ஞாயிற்றுக்கிழமை

திதி: ஷஷ்டி

நண்பகல் 11.57 வரை.

நட்சத்திரம்: கேட்டை

பிற்பகல் 03.42 வரை

சுபநேரம்: 09.13-10.43

ராகுகாலம்: 04.43-06.13

## யாழ். நாவலர் வீதியை திருத்த நடவடிக்கை

மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ள நாவலர் வீதியை திருத்தும் பணிகள் உடன் ஆரம்பிக்கப்படவிருப்பதாக மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். நகரில் கஸ்தூரியார் வீதி திருத்த வேலைகள் தற்சமயம் மேற்கொள்ளப்படுவதாகவும் —

அந்த வேலைகள் முடிவடைந்ததும் நாவலர் வீதியை திருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீநோர் வலைத் தொழிற்சாலை நிரந்தர அகதி முகாமாக இயங்கும்

## நேற்றும் ஒரு வள்ளத்தில் அகதிகள் வந்தனர்

குருநகர், மார்ச் 29

குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலை தொடர்ந்து நிரந்தர அகதி முகாமாக இயங்கவுள்ளதாகத் தெரிய வருகிறது.

குடாக் கடலின் ஊடாக வள்ளங்களில் குருநகர் இறங்குதுறைக்கு தொடர்ந்து அகதிகள் வந்து கொண்டிருப்பதைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இத்தொழிற்சாலை அகதிமுகாமைச் சூழ உள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்பட்டுள்ளதுடன் தற்காலிக மலகூடங்களும் யாழ். மாநகர சபையால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளைபெரியவெள்ளி தினமான நேற்றுக் காலையிலும் பள்ளிக் குடாவிலிருந்து ஒரு வள்ளத்தில் 4 பேர் குருநகர் இறங்குதுறைக்கு வந்து சேர்ந்தனர்.

குருநகர், பாசையூரைச் சேர்ந்த இவர்கள் அனைவரும் குருநகர் கிராம சேவையாளரின் பொறுப்பில்நேற்றே தமது இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்,

தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ள வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் தலைவர் சோமபாலகுணதீர, யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் ஆகியோர் நேற்று குருநகர் சீநோர் அகதிமுகாமிற்குச் சென்று அகதிகளைப் பார்வையிட்டனர்.

இங்கு தங்கியிருந்த அகதிகளில்சண்டிலிப்பாய், நவாலி, சாவற்காடு ஆகிய இடங்களைச் சேர்ந்த 59 குடும்பங்கள் நேற்று காலை அப்பகுதி கிராமசேவையாளரின் பொறுப்பில் தமது சொந்த இருப்பிடங்களுக்குச் சென்றனர்.

மேலும் இங்குதங்கியிருந்த அகதிகளில் பெரும்பாலானோர் நேற்றும் நேற்றுமுன் தினமும் தமது சொந்தஇருப்பிடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் உரிய கிராம சேவையாளர்கள் வந்து அழைத்துச் செல்லாமையால் சுமார் 30 வரையான குடும்பங்கள் நேற்றும் இங்கு தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-4-51)


## மாதிரிப் பரீட்சைகள்

### G. C. E. A/L - 1997

★ புதிய பாடத்திட்டம் ★ பழைய பாடத்திட்டம்

கணிதம் - உயிரியல் - கலை - வர்த்தகம்

எல்லாப் பாடங்களுக்குமான - மாதிரிப் பரீட்சைகள்

முதலாவது பரீட்சை — April மாதம்
இரண்டாவது ,, — May மாதம்
மூன்றாவது ,, — June மாதம்

★ இப் பரீட்சைகளுக்கு எவரும் தோற்றலாம்.
★ விடைத்தாள்கள் திருத்தப்பட்டு விடைகளுடன் மீளளிக்கப்படும்.
★ முதன்மைப் புள்ளி பெறுபவர்களுக்கு ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கப்படும்.
★ பரீட்சைக்கு தோற்ற வசதி இல்லாதவர்கள் தபால் மூலம் தோற்றலாம் — ஏற்கனவே தொடர்பு கொண்டவர்களுக்குப் பயிற்சிகள் அனுப்பி வைக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:

பதிவாளர்
பரீட்சைப்பகுதி BOND INSTITUTES
58A, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.
(46039)



தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு
சாவகச்சேரி
### வினோத் ரெக்ஸ்ரைல்ஸ்

கொழும்பிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்த புதுரக புடைவை வகைகளின் புதிய தெரிவுகள்

★ வெல்வெட் No. i (ஜப்பான்)
★ ரெம்பாகிறேப் (பிளேன்)
★ இன்ரக் கூலர் (பிளேன், பிரிண்டட்)
★ ஜோஜோ ( ,, ,, )
★ பட்டர்சில்க் ( ,, ,, )
★ பிளேன் ரிசு (சகல நிறங்களிலும்)
★ லேஸ் துணிவகைகள்
★ சைனிஸ் 65 x 35 பிளேன், பிரிண்டட் துணிகள்
★ பிரிண்டட் பேபிமல்
★ போய்ஸ் சேட்டிங்
★ இந்தியன் சாறிவகைகள்
★ திருமணப் பட்டுப் புடைவைகள்
★ பட்டுப் பாவாடைகள்

அனைத்து ரக சாறி பிளவுஸ் பீஸ்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:

வினோத் ரெக்ஸ்ரைல்ஸ்
இல. 19, நவீன சந்தை, சாவகச்சேரி.
தரமோ உயர்வு! விலையோ மலிவு!!
(சி/388)



## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் சின்னையா

சாவகச்சேரி, சங்கத்தானை, இத்தியடிப்பிள்ளையார் கோயில் முன்னாள் தர்மகர்த்தாவும், பிரசித்த நொத்தாரிசுமாகிய வல்லிபுரம் சின்னையா அவர்கள் 27-03-97 காலை சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சி. வல்லிபுரநாதன் (மகன்)
(சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
சாவகச்சேரி. (சி/389)


மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

## இன்றும் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 29

காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று பயணிகள் கப்பல் சேவை நடைபெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

சிவில் அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 551 க்கு உட்பட்டவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## விடுதலைப் புலி சந்தேக நபர்கள் மீண்டும் கைது

கொழும்பு, மார்ச் 29

இந்தியச் சிறையில் நான்கு வருடங்களைக் கழித்த 8 விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் இந்திய நீதிமன்றம் ஒன்றினால் விடுதலை செய்யப்பட்ட உடனேயே மீண்டும் கைது செய்யப்பட்டனர்.

இந்தியாவுக்குள் பிளாஸ்ரிக் வெடிமருந்துகள், ஆயுதங்களை கடத்த முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 1993 ஆம் ஆண்டு சிறை வைக்கப்பட்ட இவர்களை விசாக பட்டண நகர நீதிமன்றம் நேற்று முன்தினம் இரவு விடுதலை செய்தது.

எனினும் பொலீஸார் இவர்கள் சட்ட பூர்வ தஸ்தாவேஜுகள் இன்றி இந்தியாவுக்குள் பிரவேசித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் உடனடியாக மீண்டும் கைது செய்யப்பட்டார்கள்.

இவர்கள் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட இருந்தார்கள். (இ-4)

# மனித உரிமைகள் குழு இலங்கை வரவேண்டும்

## குமார் பொன்னம்பலம் அழைப்பு

ஜெனிவா, மார்ச் 29

ஆட்களைத் தன்னிச்சையாகத் தடுத்து வைத்தல், சித்திரவதை செய்தல் தொடர்பாக ஆராயும் ஐ. நா. மனித உரிமைகள் குழு உடனடியாக இலங்கைக்கு விஜயம் செய்து மனித உரிமைகள் மற்றும் மனித நேயசட்ட நிலைமை குறித்து விசாரணை நடத்த வேண்டும்.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 53 ஆவது அமர்வில் கடந்த 25 ஆம் திகதி உரையாற்றுகையில் குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தடுப்புக்காவலில் உள்ளவர்கள், சிறைவைக்கப்பட்டவர்கள், சித்திரவதைக்கு உள்ளானவர்கள், காணாமற் போனவர்கள் குறித்த மனித உரிமைகள் பற்றிய ஆராய்வு குறித்த மேற்படி அமர்வில் சர்வதேச கல்வி அபிவிருத்தி அமைப்பின் சார்பாக அவர் பேசினார். [இ-3]

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

அரசு ஆராய்ந்து வருவது தெரிந்ததே.

வடக்கு-கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் குறித்து அமைச்சர் ஜெயரத்னா மேலும் தகவல் வெளியிடுகையில் தெரிவித்ததாவது:-

தென்னிலங்கை மக்கள் தமது உள்ளூராட்சிப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தது போல, வடக்கு-கிழக்கு வாழ் மக்களும் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வாய்ப்பு அளிக்க வேண்டும்.

அதனால் வடக்கு-கிழக்கில் விரைவில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது.

வடக்கு-கிழக்கில் ஆளுங் கட்சியும் போட்டியிடுவது என்று முடிவாகியுள்ளது. கிழக்கில் எமது கட்சி தனித்தும் போட்டியிடும். இது தொடர்பாக அரசில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் ஒத்துழைப்பு பெறப்படும்.

வடக்கிலும் தனித்துப் போட்டியிடுவதா அல்லது தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதா என்பது குறித்து விரைவில் முடிவு செய்யப்படும் — என்றார். [அ-3]

## செல்வா...

(முதலாம் பக்கத் தொடர்)

தந்தை செல்வா நினைவுக் கூட்டம் நடைபெறும்.

புளொட்டின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பசுபதி சுரேஷ் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைக் கழக முக்கியஸ்தர்கள், தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் வெகுஜன இயக்கங்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் அஞ்சலி உரைகள் ஆற்றுவர்,

தந்தை செல்வாவின் நினைவுத் தூபி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரால் சுமார் 75, 000 ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு இப்போது எழிலாகக் காட்சியளிக்கிறது.

**சிலைகளுக்கு அடிக்கல்**

நினைவுக் கூட்டத்தைத் தொடர்ந்து வின்சர் தியேட்டர் சந்தியில் தந்தை செல்வாவின் சிலையை நிறுவுவதற்காக அடிக்கல் நடப்படும்.

ஆஸ்பத்திரி வீதியில் தியாகி சிவகுமாரன், குட்டிமணி ஆகியோரினதும்—

மின்சார நிலைய வீதியில் பஸ் நிலையம் முன்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கத்தினதும்—

உருவச் சிலைகளை நிறுவுவதற்காக அடிக்கல்கள் நடப்படும் நிகழ்வுகள் இடம் பெறும்.

மேற்கண்ட அனைத்து நிகழ்வுகளிலும் மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் விடுத்துள்ள அறிக்கையில் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

## மக்கள் தீவைப்பு

கொழும்பு, மார்ச் 29

பாதைத் தடுப்புக்கு அருகாமையில் முஸ்லிம் மாணவன் ஒருவனை மோதிக் கொன்ற லொறியை தீயிட்டுக் கொளுத்த பிரதேச மக்கள் முயன்றபோது பொலீஸார் தலையிட்டு அதனைத் தடுத்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் பொலீஸ் பாதைத் தடுப்பரணை தீயிட்டுக் கொளுத்தினர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை மாலை அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள கனேவலபொல என்னும் இடத்தில் நடைபெற்றது.

## விமானப்படை...

(முதலாம் பக்கத் தொடர்)

சடலம் நாகபட்டினம் கடலில் மிதந்த போது கண்டெடுக்கப்பட்டது.

சடலத்தின் பொக்கற்றில் அடையாள அட்டை ஒன்று இருந்தது.

அதில் ''ஹெலிக்கொப்டர் ஸ்குவாட்ரன்'' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தச் சடலத்தை சிறிலங்காவுக்கு அனுப்புவதா அல்லது தமிழ் நாட்டில் அடக்கம் செய்வதா என்பது பற்றி பாதுகாப்பு அமைச்சிடம் கேட்டுள்ளோம்.

இப்படி அவர் கூறினார்.

இது குறித்து சன்டே ரைம்ஸ் பத்திரிகையின் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் பி. பி. சி. சிங்களச் சேவைக்குத் தெரிவிக்கையில் கடந்த 19 ஆம் திகதி முல்லைத்தீவு கடற்பரப்பில் காணாமற்போன எம். ஐ. 24 ரக ஹெலிக்கொப்டரில் பணியாற்றிய விமானப்படை வீரரே அருணசாந்த ஆவார்.

இவர் அந்தக் ஹெலியில் சுடுபவராக (Gunner) இருந்தார். இந்தச் சடலம் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து ஒரு விடயம் தெளிவாகிறது. இந்தக் ஹெலி கடத்தப்படவில்லை என்பதேஅதுவாகும்.

இந்தக் ஹெலி பெரும்பாலும் இயந்திரக் கோளாறு காரணமாக கடலில் விழுந்திருக்கலாம் என்றே விமானப் படை அதிகாரிகள் கருதுகின்றனர் என்றர். (இ-10)

## தடுத்து...

(முதலாம் பக்கத் தொடர்)

★ பூபாலசிங்கம் தவகுமார்.
★ மரியாம்பிள்ளை ராசையா

விடுதலையானோர் விவரம் வருமாறு:-

★ சிகாமணி சுகுநாதன்
★ கிரகெரி அல்போன்ஸ்
★ மரியாம்பிள்ளை கொன்சாலின்
★ நகுலராசா ராசன்
★ பொன்னையா ரவீந்திரன்
★ சூசைப்பிள்ளை விக்ரர்
★ கே. சிறீதரன்
★ சுந்தரமூர்த்தி சர்வானந்த்
★ கறுப்பையா குமார்

ஈ. பி. டி. பி. யினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் உள்ளவர்களில் ஒரு தொகையினர் 52 ஆவது படையணிப் பிரிவுக்குள் வருவதால் அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு 51 ஆவது படையணி கட்டளை அதிகாரியினால் கோரப்பட்டுள்ளது.

(இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29-03-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org